## செய்தி வெளியீடு எண்: 286 நாள்: 27.04.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (27.4.2018) சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே துவங்கப்பட்ட திட்டங்கள் முடிவுபெற்று திறப்பு விழா காணுகின்ற நிகழ்ச்சி, புதிதாக அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சி மற்றும் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே அறிவிக்கப்பட்டு, சிறப்பாக நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தலைமை தாங்கி தலைமையுரையாற்றிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர் மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.செம்மலை அவர்களே, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் பன்னீர்செல்வம் அவர்களே, சங்ககரி சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய ராஜா அவர்களே, சேலம் மேற்கு தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு ஜி.வெங்கடாசலம் அவர்களே, மேடையிலே வீற்றிருக்கின்ற முன்னாள் நகர்மன்றத் தலைவர் திரு. கதிரேசன் அவர்களே, துணைத் தலைவர் திரு. ராம் அவர்களே, முன்னாள் கொங்கணாபுரம் ஊராட்சி மன்ற ஒன்றிய பெருந்தலைவர் திரு.மணி அவர்களே, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் மரியாதைக்குரிய திரு.சின்னசாமி அவர்களே மற்றும் வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அலுவலர்களே, கழகத்திலே பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, ஊடக நண்பர்களே, பத்திரிகை நண்பர்களே அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே நம்முடைய எடப்பாடி நகரத்திற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து, ஒவ்வொன்றாக படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். 2011 சட்டமன்ற தேர்தலில் உங்களையெல்லாம் சந்திக்கின்றபொழுது, 30 வார்டுகளிலும் தங்குதடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அதை அப்படியே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம் தெரிவித்தவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக ஆணை பிறப்பித்து, அதற்குத் தேவையான ரூபாய் 17.36 கோடியை ஒதுக்கி, அந்தப் பணி விரைவாக நடைபெற்று,

அம்மாவினுடைய திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அம்மாவினுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு, நம்முடைய எடப்பாடி நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் இன்றைக்கு சிறப்பாக கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்தில் வருகின்ற கோரிக்கையை, அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள். அதேபோல, சுற்றுச்சாலை, இன்றைக்கு எடப்பாடி நகரத்திலே உள்ளே வருகின்றபொழுது குறுகலான சாலை, கனரக வாகனங்கள் உள்ளே வரமுடியாத ஒரு சூழ்நிலை. இதை கருத்திலேகொண்டு அந்த சாலையை விரிவுபடுத்தவேண்டுமென்று சொன்னால், பல கட்டடங்களை இடிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது, அதைத் தவிர்ப்பதற்காக போக்குவரத்து நெரிசல் இல்லாமல் கனரக வாகனங்கள் எளிதாக செல்வதற்காக அம்மா புறவழிச்சாலை ஒன்றை நமக்குத் தந்து அதன் முதற்கட்ட பணி முடிக்கப்பட்டு திறந்திருக்கின்றோம், இரண்டாம்கட்ட பணி விரைவிலே திறக்கவிருக்கின்றோம், அதையும் நிறைவேற்றித் தந்தார்கள். அதேபோல மருத்துவமனை வேண்டுமென்று கேட்டோம், அதையும் ரூபாய் 4 கோடியில் கட்டிக் கொடுத்தார்கள், ஜலகண்டபுரத்திற்கும் வெள்ளாண்டிவலசுக்கு இடையே பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் அம்மா அவர்கள் கட்டிக்கொடுத்தார்கள். அதேபோல், நம்முடைய மாணவச் செல்வங்கள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்கவேண்டும், ஏழை, எளிய மக்கள் நிறைந்த இந்த பகுதியிலே உயர்கல்வி படிப்பதற்காக எங்களுக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்லூரியை கொடுத்து அழகான கட்டடத்தையும் கட்டிக் கொடுத்தார்கள், இன்றைக்கு கிட்டத்தட்ட 1205 பேர் படிக்கின்றார்கள். இப்பொழுதுகூட, நான் வந்தபொழுது, உயர் படிப்பிற்காக இன்னும் சில பாடத்திட்டங்களை கொண்டுவர வேண்டுமென்று சொன்னீர்கள், அதையும் இந்த ஆண்டு இங்கே கொண்டு வருவதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல, நெடுஞ்சாலைத் துறை கோட்ட அலுவலகம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதுவும் திறக்கப்படுகின்றது.

இன்றைக்கு மின்சாரத் துறையைப் பொறுத்தவரைக்கும் டிவிஷன் அலுவலகம் மேட்டூரிலே இயங்கி வந்தது, டிவிஷன் அலுவலகம் போகவேண்டுமென்று சொன்னால் எடப்பாடியிலிருந்து மேட்டூருக்குச் செல்லவேண்டும், நம்முடைய பகுதிக்கு வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்முடைய பகுதிக்குக் கொடுத்து, கட்டடமும் கொடுத்து அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆக, என்னவெல்லாம்

கேட்டோமோ, அத்தனையும் கொடுத்தார்கள். அதற்கு மேலாக நான் பேசுகின்ற இந்தப் பகுதியிலே வணிகவளாகம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், அப்பொழுதே அவர்கள் அறிவித்தார்கள், இப்பொழுது அந்தப் பணியும் துவங்க இருக்கின்றது, அதற்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெறுகின்றது. அதேபோல் நம்முடைய நகராட்சி மக்கள் இங்கே ஒரு அழகான பூங்கா வேண்டுமென்று கேட்டீர்கள், அதற்கும் அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பூங்கா அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, எடப்பாடி நகரத்தில் இருக்கின்ற சாலைகளை எல்லாம் விரிவாக்கம் செய்யவேண்டும், கழிவுநீர் முழுமையாக வெளியேற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள், அதையும் அம்மா அவர்களுடைய காலத்திலே நிறைவேற்றி இன்றைக்கு சாலைகள் விரிவாக்கப்பட்டு போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலையாக உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

அதேபோல, நந்திகேஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னீர்கள், அதற்கும் அம்மா நிறைவேற்றுதல் செய்தார்கள். அதோடு பஸ் நிலையத்திற்கு அருகிலே ஒரு திருமண மண்டபம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதற்கும் அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து, அடிக்கல் நாட்டப்பட்டு, பணி துவங்க இருக்கின்றது. ஆக, என்னனென்ன திட்டங்கள் கேட்டோமோ, அதையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தந்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## <u>இன்றைய திறப்பு விழா பணிகள்</u>

- IGFF **2014–15** திட்டத்தில் (பொன்விழா ஆண்டு திட்டம்) ரூ.**2.50** கோடி மதிப்பீட்டில் வாரச்சந்தை மேம்பாட்டு பணி முடிக்கப்பட்டு இன்றையதினம் திறக்கப்பட்டுள்ளது.

- IGFF **2014–15** திட்டத்தில் (பொன்விழா ஆண்டு திட்டம்) ரூ.**1.00** கோடி மதிப்பீட்டில் **16** எண்ணிக்கை துப்புரவு பணியாளர்கள் குடியிருப்புகள் கட்டும் பணி முடிக்கப்பட்டு இன்று திறப்பு விழா செய்யப்பட்டிருக்கின்றது.

- IGFF **2014–15** திட்டத்தில் (பொன்விழா ஆண்டு திட்டம்) ரூ.**1.30** கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகளில் **18** கடைகள் பணி முடிக்கப்பட்டு இன்றையதினம் திறக்கப்படுகின்றது.

- TURIP-2016-17(Phase-II) திட்டத்தில் ரூ.**2.50** கோடி மதிப்பீட்டில் **3**(சிப்பம்) பணிகள் தார்சாலை **4.393** கி.மீ, சிமெண்ட்சாலை **1.100** கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டு இன்று திறப்பு விழா காணப்பட்டுள்ளது.

## இன்று அடிக்கல் நாட்டப்படும் பணிகள்

- TUFIDCO LOAN 2014-15 திட்டத்தின் கீழ் (பொன்விழா ஆண்டு திட்டம்) பேருந்து நிலையம் அருகில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் நகராட்சி வணிக வளாகம் கட்டும் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2017–18ல் இடைப்பாடி நகராட்சியில் 5 இடங்களில் நுண் உர மையம் (MCC) ரூ.3.18 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயார் செய்தும், மக்காத குப்பைகளை பிரித்து அவ்வப்போது அகற்றி நகரில் குப்பைகள் தேங்காமல் இருக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

## விரைவில் தொடங்கப்பட உள்ள பணிகள்

- சட்டமன்ற புதிய அறிவிப்புகள் 2017–18ல் அறிவிக்கப்பட்ட திட்டமான இடைப்பாடி நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் வெள்ளண்டிவலசு பகுதியில் இன்றைக்கு திட்டத்தை நிறைவேற்றவிருக்கின்றோம் என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.
- இடைப்பாடி நகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் CGF/O&M Gap Filling Fund திட்டத்தில் விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

## தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இந்நகராட்சியில் நிறைவேற்றப்படும் பணிகள்

- இடைப்பாடி நகராட்சி பகுதியில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின்மூலம் ஏழை மக்களுக்கு 2117 வீடுகள் தலா ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.44.45 கோடிக்கு வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட அனைத்து திட்டங்களாலும் இந்நகராட்சியில் வசிக்கும் 54823 பொதுமக்களும் பயனடைகிறார்கள்.

ஆகவே, இவ்வளவு திட்டங்களையும் அம்மாவினுடைய அரசு சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைக்கப்பட்டு முடிவுற்று பணிகள் மட்டும் 6 பணிகள், ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 7 கோடியே 44 இலட்சம், அடிக்கல் நாட்டப்பட்ட புதிய பணிகள்–6, அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 9 கோடி 77 இலட்சத்து 690. தொடங்கி வைக்கப்படும்

கால்நடை பராமரிப்புத் துறை பணிகள்–1, ஒதுக்கப்பட்ட நிதி 2.974 லட்சம். நலத்திட்ட உதவிகள் பெறும் 1727 பயனாளிகளுக்கு சுமார் 8 கோடியே 79 லட்சம் ரூபாய் இன்றைக்கு வழங்க இருக்கிறோம். ஆகவே, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக புதிதாக தொடங்கப்பட்ட பணிகள், அடிக்கல் நாட்டப்பட்ட பணிகள், நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்ச்சி சுமார் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். 2011–ல் எடப்பாடி நகரம் எப்படி இருந்தது, 2011–க்குப் பிறகு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை ஏராளமான திட்டங்கள் எடப்பாடி நகர மக்களுக்கு அளித்ததன் மூலமாக, இன்றைக்கு எடப்பாடி நகரம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை கண்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். கவுண்டம்பட்டியிலிருந்து அரசு மருத்துவமனைக்கும், அரசு மேல்நிலைப்பள்ளி வருவதற்கும் ஒரு பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் அம்மாவினுடைய அரசு 1 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவிலே கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் என்னென்ன கோரிக்கை வைத்தீர்களோ அதையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் உட்புற சாலைகள், ஆங்காங்கே இருக்கின்ற 30 வார்டுகளில் இருக்கின்ற குறுக்கு சாலைகளை சீரமைக்கின்ற பணியும் அம்மாவினுடைய அரசால் துவங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு எடப்பாடி நகரம் பல்வேறு திட்டங்களின் வாயிலாக நீங்கள் வைத்த பெரும்பாலான கோரிக்கைகளை நான் நிறைவேற்றித் தந்திருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, எடப்பாடி தொகுதி ஒரு பின்தங்கிய பகுதியாக இருந்தது. ஆகவே, இந்த பின்தங்கிய பகுதியை வளர்ச்சி அடைந்த பகுதியாக கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே பல்வேறு திட்டங்களை நாங்கள் உருவாக்கி இன்றைக்கு செயலாக்கத்திலே கொண்டு வந்திருக்கிறோம். சித்தூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு, தரம் உயர்த்தி அதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அங்கே 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தி, அங்கே இருக்கின்ற மக்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்காக இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, நங்கவள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி அங்கேயும் 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தி, அங்கிருக்கின்ற பகுதி மக்களுக்கு தகுந்த சிசிக்சை அளிக்கப்படுகின்றது. அதேபோல கொங்கணாபுரம் ஒன்றியத்தில்,

கொங்கணாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அங்கேயும் பொதுமக்களுக்கு தேவையான சிசிக்சை அளிக்கப்படுகிறது. அதேபோல மாதிரி பள்ளி, அதுவும் அம்மாவினுடைய ஆட்சியிலேதான் திறக்கப்பட்டது. இன்றைக்கு கொங்கணாபுரம் ஒன்றியத்தில் வெள்ளாளபுரம் பகுதியில் முனியம்பட்டி பகுதி, எடப்பாடியில், செட்டிமாங்குறிச்சி, நந்தவள்ளியில் கட்டப்பட்டுள்ளன, ஆகவே, அனைத்து வசதிகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தி, அனைத்து வசதிகளையும் நாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கெங்கவள்ளியில் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தியிருக்கிறோம். அதேபோல, இன்றைய தினம் கொங்கணாபுரத்தில் ஆண்கள், பெண்கள் ஒன்றாக படித்திருந்த பள்ளியை, பெண்களுக்கென்று தனியாக பிரித்து மேல்நிலைப்பள்ளி உருவாக்கப்பட்டிருக்கிறது. கோணசமுத்திரத்தில் உயர்நிலைப் பள்ளி ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, கால்நடை செல்வங்கள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக பக்கநாட்டில் ஒரு புதிய கால்நடை மருந்தகத்தை கொடுத்திருக்கின்றோம்.

அதேபோல, விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களை, விலை வீழ்ச்சி அடைகின்றபொழுது அந்த தானியங்களை கூட்டுறவு சங்கத்தின் மூலமாக சேமித்து வைப்பதற்கு வேண்டிய கிடங்கு ஒன்று கட்டப்பட்டு அதில் வைத்துக் கொள்ளலாம். விலை குறைகின்றபொழுது, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய தானியங்களை வைத்து, குறைந்த வட்டியிலே கடனை பெற்றுக் கொள்ளலாம், தானிய விலை உயர்கின்றபொழுது விற்று, இன்றைக்கு இலாபம் அடையலாம். அந்தக் கட்டடத்தையும் ரூபாய் 2 கோடி செலவில் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். அதேபோல, வேளாண்மைத்துறை அலுவலகம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். எடப்பாடி நகரத்தில் மத்திய கூட்டுறவு வங்கி இன்றைக்கு துவங்கப்பட்டிருக்கின்றது. புதிய நியாயவிலைக் கடைகள் திறந்திருக்கின்றோம். புதிய நியாயவிலைக் கடைகளுக்கு கடைகள் கட்டிக் கொடுத்திருக்கின்றோம், பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். பேருந்து நிறுத்தத்திற்கு நிழற்குடை கட்டிக் கொடுத்திருக்கின்றோம். பல்வேறு சாலைகளை புதுப்பித்துக் கொடுத்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 158 கோடியில் சிறப்பான திட்டம், இன்னும் ஒரு மாதத்தில் நிறைவு பெற்று, மேச்சேரி, நங்கவள்ளி உள்ளிட்ட அனைத்து பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் விரைவாக வழங்கப்படும் என்ற

மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீரை அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்து, அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான தண்ணீரை வழங்கியிருக்கின்றோம். இவ்வளவு திட்டங்களையும் 2011–லிருந்து 2018–க்குள் நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். அனைத்து சாலைகளையும் சீர் செய்திருக்கின்றோம்.

அதேபோல், ஜலகண்டாபுரத்தில் இருக்கின்ற சாயக் கழிவுகள் எல்லாம் பக்கத்திலிருக்கின்ற ஏரியில் வந்து கலந்து கொண்டிருந்தது. அதை சுத்திகரிக்க வேண்டுமென்று சொன்னார்கள், அதற்கு ஏரியை சுத்திகரிக்கும் பணியை துவக்கியிருக்கின்றோம், அந்தப் பணியும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நம்முடைய கிழக்குக்கரை கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுகின்றபொழுது, நிறைய தண்ணீர் வீணாகின்றது, அதை தவிர்ப்பதற்காக, காங்கிரீட் கால்வாயாக மாற்றியமைப்பதற்கு தேவையான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நிறைய திட்டங்கள் நம்முடைய எடப்பாடி தொகுதிக்கு செய்திருக்கின்றோம், சேலம் மாவட்டத்திற்கு நிறைய திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றோம். பாலம் கட்டித்தந்திருக்கின்றோம், பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். கூட்டுக் குடிநீர் திட்டம் கொடுத்திருக்கின்றோம். அனைத்துப் பகுதிகளுக்கும் அம்மாவினுடைய ஆட்சியில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், எதிர்க்கட்சி மட்டும் இந்த ஆட்சியில் எதுவுமே செய்யவில்லை, எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை என்று சொல்கிறார்கள், நீங்களே வந்து பாருங்கள், மக்கள் மத்தியில் வந்து கேட்டு தெரிந்துகொள்ளுங்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் மக்களுக்குத் தேவையான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. மக்கள் வைத்த கோரிக்கையை கவனமாக பரிசீலித்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஏழை, எளியவர்களுக்கு கொடுக்கின்ற வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை தருகின்றோம். அதுமட்டுமல்ல, பத்திரப்பதிவு செய்யும் பொழுது, பட்டா மாறுதலுக்கு அந்தந்த தாலுகா அலுவலகத்திற்கு சென்றுதான் செய்யவேண்டுமென்ற நிலையை மாற்றி, பத்திரப்பதிவு செய்கின்றபொழுதே, அதற்காக ஒதுக்கப்பட்ட தனியான இடத்தில் பூர்த்தி செய்து பட்டா

வேண்டுமென்றால் அந்த சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நேரடியாக சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்திற்கு அது அனுப்பி வைக்கப்பட்டு, அங்கே சரிபார்க்கப்பட்டு, பத்திரப்பதிவு செய்பவர்களுக்கு பட்டா வழங்குகின்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு பட்டாவிற்காக யாரும் அலைய வேண்டிய அவசியமில்லை. பதிவு செய்கின்ற போதே, அந்த பத்திர பதிவு அலுவலகத்திலிருந்து அந்த நகல் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்திற்கு சென்று அது பதிவு செய்யப்படும். தனி பட்டா வாங்குவதற்காக நீங்கள் செல்ல வேண்டியதில்லை. கூட்டு பட்டாவாக இருந்தால் அதை சரிசெய்து, அதை அளந்து, அதை தனிப் பட்டவாக உங்களுக்கு வழங்குவதற்கு ஒருமாத காலம் ஆகும். இப்போது அந்த உத்தரவை வழங்க இருக்கின்றோம். தனி பட்டாவாக இருந்தால் உடனடியாக பத்திரப் பதிவு செய்தவுடன் பத்திர பதிவு அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்திற்கு வந்தவுடன் உங்களுக்கு வழங்கப்படும். ஆகவே, ஒரு வருடத்திற்கு சுமார் 7 லட்சம் பத்திரப் பதிவு செய்யப்படுகிறது என்று சொன்னால், அந்த 7 லட்சம் பேரும் இன்றைக்கு பட்டா மாறுதல் செய்ய வேண்டும் என்றால் தாலுகா அலுவலகத்திற்கு செல்ல வேண்டும். அந்த நிலையையும் அம்மாவுடைய அரசு இன்றைக்கு நிவர்த்தி செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, பட்டா மாறுதல் வேண்டும் என்று நீங்கள் விண்ணப்பித்தால், அம்மா திட்டத்தின் வாயிலாக உடனடியாக தீர்வு செய்யப்படுகிறது. எவ்வளவோ நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம்.

அதேபோல கல்வியிலே ஒரு புரட்சி, மறுமலர்ச்சியை நீங்கள் பார்க்க முடிகிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் உயர்கல்வி படிக்கக்கூடிய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. 2011இல் அம்மா ஆட்சி பொறுப்பேற்ற போது, அதற்கு முன்பு, திமுக ஆட்சி இருந்தது. திமுக ஆட்சிக்கு பிறகு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அம்மா முதலமைச்சராக ஆனவுடன் அம்மா கல்வியில் செய்த மாற்றம் புரட்சியின் காரணமாக இன்றைக்கு உயர்கல்வி கற்போருடைய எண்ணிக்கை உயர்ந்து, உயர்கல்வி கற்போருடைய எண்ணிக்கை 46 சதவிகிதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உயர் கல்வி படிப்பதிலே திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அப்படி ஒரு அற்புதமான திட்டத்தை அம்மா உருவாக்கியதன் காரணமாகத் தான் மாணவர்களுடைய உயர்கல்வி படிக்கின்ற எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு வேளாண் துறையை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டு 142 ஆண்டுகாலம் இல்லாத கடுமையான வறட்சி. அந்த வறட்சி காலத்தில் கூட, விலைவாசி உயராமல் பார்த்துக் கொண்டோம். பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக தேவையான

நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் குடிநீர் பிரச்சினை இல்லாமல் பார்த்துக் கொண்டோம். ஆகவே, வறட்சியின் காரணமாக பெய்கின்ற மழைநீர் முழுவதுதையும் சேமித்து வைப்பதற்காக குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக முதல் கட்டமாக பரிட்சார்த்த முறையிலே 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 1519 ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டன.மேலும் இன்றைக்கு கிட்டத்தட்ட 1600 ஏரிகள் தேர்வு செய்யப்பட இருக்கின்றன. அதற்காக 331 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு, மதகுகள் சரிசெய்யப்பட்டு கால்வாயில் வருகின்ற தண்ணீர் முழுமையாக ஏரிக்கு வருவதற்கும், அதுபோல வெளியேறுகின்ற உபரிநீர் வருகின்ற அந்த கால்வாய்களையும் சீர்செய்வதற்கு எவ்வளவு நிதி தேவையோ அதையும் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, நிலத்தடி நீரை உயர்த்த வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே ஓடைகளிலும், நதிகளிலும் தடுப்பணை கட்டுவதற்காக கிட்டத்தட்ட மூன்றாண்டு கால திட்டமாக 1000 கோடி ரூபாய் ஒதுக்கீட செய்யப்பட்டு, இன்றைக்கு முதல் கட்ட பணி சுமார் 350 கோடி ரூபாயிலே இந்த ஆண்டுமுதல் துவக்க இருக்கின்றோம். ஆகவே, பெய்கின்ற மழைநீர் முழுவதையும் சேமித்து வைக்கப்பட்டு, சேமித்து வைக்கப்படுகின்ற நீர் நிலத்தடிக்கு சென்று நிலத்தடி நீர் உயர்ந்து மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி மற்றும், விவசாயத்திற்கு வேண்டிய நீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இவ்வளவு திட்டமும் நாங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம்.

ஆனால் எதிர்க்கட்சியைப் பொறுத்தவரைக்கும் இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை என்று சொல்கிறார்கள். அம்மாவினுடைய ஆட்சியில் தான் மக்களுக்கு தேவையான திட்டங்களை செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றத் தேர்தலில் சொன்னார்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 12000 ரூபாயிலிருந்து 18000 ரூபாயாக உயர்த்தப்படும் என்று சொன்னார்கள், அதையும் அம்மாவினுடைய அரசால் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல அம்மா இருசக்கரவாகனத்திற்காக அதிகபட்சமாக 25000 ரூபாய் மானியம் கொடுக்கிறோம். எந்த இருசக்கர வாகனம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். இதுவரையில் 3 லட்சத்து 34 ஆயிரம் பேர் பதிவு செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட படிப்படியாக 3 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட அனைவருக்கும் ரூபாய் 25000 ரூபாய் மானியத்தில் அவர்கள் விரும்புகின்ற இருசக்கர வாகனத்தை வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, அம்மாவால் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் அம்மாவினுடைய

அரசு முழுமூச்சுடன் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கு நன்றியை தெரிவித்து, அதுமட்டுமல்ல, நான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தாலும் நான் எடப்பாடி தொகுதிக்கு அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றேன். எல்லா பகுதிகளுக்கும் போகிறேன். ஆங்காங்கே இருக்கின்ற மக்களை சந்தித்து, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றேன். ஆகவே, 234 தொகுதியும் முதலமைச்சருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினாலே, ஆங்காங்கே பிரச்சினைகள் இருக்கின்ற பொழுது, அதையெல்லாம் சரி செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே நான் இப்பொழுது மாதத்திற்கு இரண்டு முறையாக வந்துவிட்டு செல்கிறேன். முன்பெல்லாம் அடிக்கடி வந்தீர்கள், முதலமைச்சராக ஆனபின்பு தொகுதிக்கு வரவில்லை என்று நீங்கள் குறைபட்டுக் கொள்ளக்கூடாது. நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை நான் நிறைவேற்றித் தருகின்றேன். உங்களைப்போல் 234 தொகுதியில் உள்ள மக்களும் தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று எண்ணுகின்ற காரணத்தினால் அவர்களுடைய பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய காரணத்தினாலேதான் நான் அடிக்கடி வரமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும், உங்களை அடிக்கடி நேரடியாக சந்தித்து மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு நான் தயாராக உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**